அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்: 194 /2016
தேதி: 26.12.2016

**சாத்தூர் பட்டாசு ஆலை வெடிவிபத்து 6 பேர் பலி**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் உள்ள பட்டாசு ஆலையில் இன்று காலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

வெடிவிபத்துக்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதால், அப்பாவி தொழிலாளர்கள் உயிரிழக்கிறார்கள் அதனால், பட்டாசு ஆலைகளின் உரிமையாளர்கள் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யவேண்டும். அரசு அதிகாரிகள் இனியும் அலட்சியமாக இருக்ககூடாது. மேலும் வெடிவிபத்துக்கள் ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு என் சார்பாகவும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

ஆர் சரத்குமார் B Sc.
நிறுவனத் தலைவர்